ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®
For Private Circulation Only
ECHOES INDIA
அக்டோபர் 2013 மலர் 6, இதழ் 6

## செப்டம்பர் 2013









### பெலாரஸ், மின்ஸ்க் ஆசிரமம் தொடங்கிவைத்தல்

செப்டம்பர் 1, ஞாயிறன்று மாஸ்டர் வழக்கம்போல் கீதை கலந்துரையாடல் கூட்டத்தில் கலந்து கொண்டார். அந்த அமர்வு முடிந்த பிறகு, மாஸ்டர் அலுவலக அறைக்குள் சென்று, மணப்பாக்கத்தில் உள்ள அனைத்து ரஷ்ய அப்யாசிகளும் மற்றும் ரஷ்யாவிலிருந்து வந்து ஒமேகா பள்ளியில் படித்து வரும் அனைத்து மாணவர்களும் அந்த நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக உள்ளனரா என உறுதி செய்து கொண்டார். வீடியோ தொடர்பின் மூலம் மாஸ்டர் மின்ஸ்க் அப்யாசிகளுடன் பேசினார். மாஸ்டர் "நமக்கு இது ஒரு ரஷ்யன் ஆசிரமம், நாம் இது போல நிறைய ஆசிரமங்களை பெற போகிறோம்" என்று கூறினார். மேலும் அவர், தனக்கு ஸ்லாவோனிக் மக்களுடன் நீண்ட காலத்தொடர்பு இருப்பதாகவும், அது கடந்த பிறவிகளிலிருந்தும்கூட இருக்கலாம் என்றும் கூறினார். அவர், 'திரும்பவும் ஒரு முறை ரஷ்யா வந்து உங்களனைவரையும் மீண்டும் மீண்டும் பார்க்க விரும்புகிறேன்' என்று தன்னுடைய ஆவலை வெளிப்படுத்தினார். மாஸ்டர் அவர்களை அங்கீகரித்து, 'அரை டஜன் ரஷ்யன் குழந்தைகள் இங்கே இருக்கிறார்கள். அவர்கள் இப்பொழுது ஒமேகா பள்ளியில் படித்து வருகிறார்கள். இது போல மேலும் அதிகம் பேர் வரவேண்டும் என விரும்புகிறேன்' என்று கூறினார். உரையின் முடிவில், சத்சங்கம் நடத்தி, ரஷ்ய மொழி பேசும் அனைத்து அப்யாசிகளுக்கும் பிரசாதம் வழங்கி, பகிர்ந்தளிக்கச் செய்தார்.

மாஸ்டரின் உடல்நலம் நன்கு தேறிக்கொண்டு வந்தது. ஒருநாள் அவர் வாக்கரைப் பயன்படுத்தி நடந்து வந்து, காட்டேஜிற்கு வெளியே அமர்ந்திருந்தார். மிக நீண்ட காலத்திற்கு பிறகு மாஸ்டரால் நடக்க முடிந்து வெளியே வர முடிந்தது.

மாஸ்டர் தன்னுடைய அதிக நேரங்களையும், கவனத்தையும் வரலாற்று குழுவிற்கு கொடுத்து வருகிறார். மாஸ்டர் அவர்களிடம் "என்னிடம் வந்து சகஜ மார்க்க வரலாறு குறித்து கேள்வி கேளுங்கள், அவற்றிற்கு என்னால் சாத்தியமானவரை பதிலளிக்கிறேன்" என்று கூறினார். ஒவ்வொரு நாள் காலையிலும் இந்த குழு காட்டேஜிற்கு வந்து கொண்டிருக்கிறது. மாஸ்டர் 9 மணிக்கெல்லாம் தயாராக இருப்பார். மாஸ்டர் அவர்களுக்கு சிட்டிங் அளித்து, ஒரு மணி நேரத்திற்கும் மேலாக செல்லும் கேள்வி-பதில் நிகழ்வில் பதில் அளிப்பார். இந்த கருத்து பகிர்தலில் மாஸ்டர் ஈடுபாட்டுடன் கலந்து கொள்வதை பார்ப்பது ஒரு விருந்தாக இருந்தது. அவரைச்சுற்றி இருக்கும் அனைவரும் தன்னையறியாது தானியங்கி போல ஈடுபாடு அடைந்தனர். அந்த ஊக்கப்படுத்துதலும், அறிந்து கொள்ளும் ஆர்வமும், கற்றுக்கொள்ள மதிப்பு மிக்கதாய், நம்முடைய வாழ்க்கையில் கொண்டு வரவேண்டிய பயிற்சியாய் இருக்கிறது. அவர் மற்றவர்களை ஊக்கப்படுத்தவேண்டும்







என்று தனியாக எதையும் செய்வதில்லை. ஆனால், அவர் தனது சுய ஊக்கத்தை முன்வைப்பதன் மூலம், தன்னைச் சுற்றி இருப்பவரை ஊக்கமடையச் செய்கிறார்.

வழக்கம் போல் ஞாயிற்றுக்கிழமைகளில், சத்சங்கம் சகோ.கமலேஷ் அவர்களாலும், குடிலின் முற்றத்தில், கீதை விளக்கவுரை சகோ.சமஸ்கிருத கண்ணன் அவர்களாலும் தொடர்ந்து நடத்தப்பட்டுவருகின்றன. கீதையின் இரண்டாம் பாகத்தில் விவரிக்கப்பட்டுள்ள ஞானம் பற்றிய விளக்கவுரை தற்போது நடைபெற்று வருகிறது. இந்த நிகழ்ச்சிக்கு வருகிறவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. மாஸ்டருடன் இருப்பதற்கும், இந்நிகழ்ச்சியில் கலந்துகொள்ளவும், குடிலுக்கு வெளியே காலை 9 மணிக்கு அப்யாசிகள் நீண்ட வரிசையில் நிற்பதை ஒருவர் காணலாம்.

செப்டம்பர் 11 புதன் கிழமை அன்று, ஆசிரமத்திற்கு பின்புறம் உள்ள டாக்டர் நட்வரின் வீட்டினை (Apartment) மாஸ்டர் திறந்து வைத்தார். வீட்டினைச் சுற்றிப் பார்த்த பின்னர் அங்கு குழுமியிருந்த சுமார் 400 அப்யாசிகளுக்கு 45 நிமிடங்களுக்கு சத்சங்கம் நடத்தினார். அருள் நிரம்பிய நிகழ்ச்சியாக அது இருந்தது. மாஸ்டர் பிற்பகல் குடிலுக்குத் திரும்பினார். மாலையில் குடிலில் குழுமி இருந்தவர்களுக்கு சத்சங்கம் நடத்தினார்.

செப்டம்பர் 12 வியாழக்கிழமை, மாதுரியின் பிறந்தநாள். முழங்காலில் அறுவை சிகிச்சை செய்யப்பட்டு குணம் அடைந்துவரும் அவரை, மாஸ்டர் காயத்திரிக்குச் சென்று பார்க்க விரும்பினார். காயத்திரியில், மாதுரியுடனும் குடும்பத்தினருடனும் நேரத்தினை செலவழித்தார். கூடத்தில் அமர்ந்து ஒவ்வொருவரிடமும் பேசிக் கொண்டிருந்தார். "என்னுடைய பேத்தியின் பிறந்த நாளில் இருப்பது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது " என்றார் மாஸ்டர்.

**ஓணம் பண்டிகை**

செப்டம்பர் 16ம் தேதி திங்கட்கிழமை ஓணம் பண்டிகை. ஏறத்தாழ 350 அப்யாசிகள் கேரளாவில் இருந்து வந்திருந்தனர். விடியற்காலையில், அப்யாசிகள் குடிலுக்கு முன்பாக பூக்கோலம் போடுவதை மாஸ்டர் சிறிது நேரம் கவனித்தார். ஒவ்வொருவருக்கும் ஓணம் நல் வாழ்த்துக்களைத் தெரிவித்தார். 9.00 மணிக்கு Dorm A யில் குழுமி இருந்த அப்யாசிகளுக்கு சத்சங்கம் நடத்தினார். சத்சங்கத்திற்கு முன்னதாக மதப் பழக்க வழக்கங்கள் மற்றும் மக்களின் நம்பிக்கை குறித்து பேசினார். இந்து, கிறித்துவர் மற்றும் முஸ்லீம் என்று ஒருவரும் இல்லை. ஆனால் நாம் அனைவரும் மனிதர்கள் என்றார். அன்பு தான் முக்கியமான விஷயம். அது ஒன்று தான் அத்தகைய நம்பிக்கைகளை வெற்றி கொள்வதற்கான கருவி ஆகும். ஒவ்வொரு அப்யாசியும் சகஜமார்க்கத்தின் தூதுவர்கள் என்றும், அப்யாசிகளுக்கும், பிரெபெக்ட்களுக்கும் வேறுபாடு ஏதும் இல்லை என்றும், ஒவ்வொருவரும் மிஷனின் வளர்ச்சியில் பங்கு கொள்ள வேண்டும் என்றும் கூறினார். பிற்பகலில், ஓணம் பண்டிகைக்கான சிறப்பு விருந்து சமையல் அறையில் தயாரிக்கப்பட்டு, மாஸ்டருக்காக குடிலுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது.

◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆

செப்டம்பர் 18 அன்று உடல் நிலை சரியில்லாததால், குடிலின் மராமத்து பணிசெய்வதை ஒத்தி வைத்துவிட்டு, குடிலிலேயே தங்கும் படி மருத்துவர்கள் கூறிய போதிலும், மாஸ்டர் கார்டன் ஆப் ஹார்ட்ஸ் இல் உள்ள சகோ.சத்பீரின் இல்லத்திற்குச் சென்றார். திட்டமிட்டபடி வேலை நடைபெற வேண்டும் என மாஸ்டர் வற்புறுத்தினார். தனக்கு அசௌகரியமாக இருந்தபோதும், ஒரு விஷயத்தில் மாஸ்டர் முடிவு எடுத்து விட்டார் எனில் அதிலிருந்து அவரை மாற்றுதல் என்பது மிகவும் கடினம்.

மாஸ்டர், முதல் இரண்டு நாட்கள் சத்பீர் இல்லத்தில், காலையில் சத்சங்கம் நடத்தினார். ஆனால் அப்யாசிகளில் பலர் சத்சங்கத்திற்கு தியானக்கூடத்திற்குச் செல்லாமல் அங்கு வருவதைக் கண்டு மிகவும் வருத்தம் அடைந்தார். "நீங்கள் எங்கு சத்சங்கத்தில் கலந்து கொண்டாலும், நீங்கள் பெறுவது ஒரே மாதிரியான பிராணாஹுதி தான்" என்று கூறி அனைவரையும் தியானக் கூடத்திற்குச் செல்லும்படி கேட்டுக்கொண்டார்.

செப்டம்பர் 21ம் தேதி சனிக்கிழமை: மாஸ்டர் காயத்திரி சென்றார். அவருடைய இயல்பான உற்சாகத்துடன் குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரிடமும் பேசிக்கொண்டு நேரடியாக காலை உணவு உட்கொள்ளச் சென்றார். மாஸ்டர் காலை உணவுக்குப்பின்னர் அவருடைய அலுவலகத்திற்குச் சென்று சில பணிகளைக் கவனித்தார். பின்னர் கணினியில் சில நேர்காணல் நிகழ்ச்சியினைக் கண்டு களித்தார். பிறகு, மாஸ்டர் சில அப்யாசிகளை சந்தித்தார். பின்னர் அனைவருக்கும் சிட்டிங் கொடுக்க முடிவு செய்தார். மாஸ்டருக்கு, அமெரிக்காவிலிருந்து தருவிக்கப்பட்ட ஒரு புது









சக்கர நாற்காலி அளிக்கப்பட்டுள்ளது. அது மிக நவீனமாகவும், அதிலுள்ள எல்லா செயல்பாடுகளையும் விரும்பத்தக்க விதத்தில் மாற்றிக் கொள்ளும்படியும் வடிவமைக்கப்பட்டுள்ளது. மாஸ்டர் அதை முயற்சி செய்து மகிழ்ச்சியடைந்தார்.

மதிய உணவிற்கு பின் மாஸ்டர் கூடத்தில் வந்தமர்ந்தார். ஐரோப்பாவிலிருந்து வந்த அப்யாசிகள் குழு ஒன்று அங்கு குழுமியிருந்தது. மாஸ்டர், மூச்சு விட சிரமப்பட்டதை அறிந்த, டென்மார்க்கை சேர்ந்த ஒரு சகோதரி, அவருக்கு சில பயிற்சி முறைகளை சொல்லித்தந்தார். ஆச்சரியப்படும் வண்ணம் மாஸ்டர், 5 நிமிடங்களிலேயே சீராக மூச்சு விட தொடங்கினார். மாலையில், ஆசிரமத்திலுள்ள அனைத்து அப்யாசிகளுக்கும், தான் 'காயத்ரி'யில் ஓய்வெடுக்க வந்திருப்பதாக அறிவிக்கச்சொன்னார்.

செப்டம்பர் 22 ம் தேதி ஞாயிறன்று, மாஸ்டர் 'காயத்ரி'யில் சத்சங்கம் நடத்தினார். அதன் பின், சில திருமணங்களை நடத்திவைத்து, புது மணமக்களுக்கு ஆசிகள் வழங்கினார்.

சென்னைக்கு மேற்கே 45 கி.மீ தொலைவில் அமைந்துள்ள திருவள்ளூரில், மிஷனுக்காக நிலம் வாங்கப்படும் பணிகளில், அடுத்த இரண்டு நாட்களிலும் மும்முரமாக ஈடுபட்டார். அந்நிலத்திற்கு சொந்தக்காரர்கள் அனைவரும் குடும்ப சகிதம் 'காயத்ரி'க்கு வந்திருந்தனர். மாஸ்டர் அனவரையும் தனிப்பட்ட முறையில் சந்தித்தார். அனைவரும் உணவு அருந்தியதை உறுதி செய்து கொண்டார். விற்பனை ஆவணம், மற்றும் ஒப்பந்த பத்திரங்களில் கையெழுத்திட வேண்டிய பணி மிகப் பெரியதொன்றாக இருந்தது. மாஸ்டர் எல்லா ஆவணங்களையும் சரிபார்த்தபின் கையெழுத்திட்டார். சுமார் 300 கையெழுத்துகள் இட வேண்டிய இப் பணி இரண்டு நாட்களிலும் பின்னிரவு வரை நீடித்தது. ஆனாலும் மாஸ்டர் இதை, முகத்தில் புன்னகையுடன், அனுபவித்துச் செய்தார். நாம் அனுபவித்துச்செய்யும் எச்செயலுமே நமக்கு தொந்தரவாக இருக்காது என்பதை அது உணர்த்தியது.

செப்ட்ம்பர் 28 ம் தேதி, சனிக்கிழமையன்று மாஸ்டர் ஆசிரமத்திற்கு திரும்பி வந்தார். நவம்பர் மாதம், ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஒரு ஐரோப்பிய கருத்தரங்கிற்கு 'அறியாமையிலிருந்து அறிவிற்கும், பின் முற்றிலும் அறியாமைக்கும்' என்ற தலைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. மாஸ்டர் இத்தலைப்பின் மீது மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். மனதிடம் மற்றும் எண்ணங்கள் மீது கருத்துகள் பரிமாறப்பட்டன. மாஸ்டர், "அறிதல் மற்றும் செயல்களுக்கு மனோதிடமே பாலமாக உள்ளது. 'AUDE SAPERE' (Dare to think) எண்ண துணி, ஆனால் எண்ணத்துணிந்த பின் செயலாற்ற வேண்டும். அதற்கு மனவலிமை தேவை. மனவலிமையை மேலும் மேலும் உபயோகிக்க, நம் தேர்வுகள் குறைந்து விடும்; அது நாம் எளிய வாழ்க்கையை மேற்கொள்ள வழி செய்கிறது. இயற்கையோடு ஒத்திசைந்த எளிமையான வாழ்க்கை வாழ்வது, நம் மன வலிமையை உபயோகித்து, தேர்வுகளை குறைத்துக்கொள்வதன் மூலம் சாத்தியமாகிறது. எளிமையான வாழ்க்கை வாழ்வது அத்தனை சுலபமானதில்லை." என்று மாஸ்டர் கூறினார்.

**திருவள்ளூர் பயணம்**

கடந்த சில நாட்களில், சென்னையிலிருந்து மேற்கே 45 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள திருவள்ளூர் மாவட்டத்தில், 'SMSF'ற்காக 113 ஏக்கர் நிலம் பத்திரப்பதிவு செய்யப்பட்டது. மாஸ்டர் அவ்விடத்தை பார்வையிட விரும்பியதையொட்டி, சகோ.வினய் கிருஷ்ணா மற்றும் தன்னார்வத்தொண்டர்கள், முன்னிரவே, தியான ஷாமியானா, மாஸ்டர் கூடாரம், மற்றும் அப்யாசிகளுக்கான தற்காலிக கழிப்பறைகள் முதலியன அமைத்து விட்டனர். சென்னை மற்றும் திருவள்ளூர் அருகாமையிலிருந்து சுமார் 300 அப்யாசிகள் அங்கு கூடியிருந்தனர்.

செப்டம்பர் 28 ம் தேதியன்று, மாஸ்டர்,தனது பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட இருக்கை கொண்ட 'மெர்ஸிடிஸ்' வேனில், காலை சுமார் 8:30 மணி அளவில், வளாகத்தை வந்தடைந்தார். அனைவருக்கும் பிரசாதம் வழங்கி, தியானப்பந்தல் வந்து சுமார் 45 நிமிடம் சிட்டிங் கொடுத்தபின், உரையாற்றினார். இந்நிலம் எவ்வி தம் பயன்படவேண்டுமென்ற தன் உள்ளப்பாங்கை விவரித்தார். ஒரு மருத்துவ மையம், தியானக்கூடம், பால் பண்ணை, விவசாய பண்ணை போன்றவை இதில் அடங்கும். இருப்பினும் தியானம் முக்கிய செயல்பாடாக இருக்குமென மாஸ்டர் கூறினார். புது அப்யாசியான, திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் திரு. வீரராகவ ராவ், மாவட்ட நிர்வாகத்திலிருந்து, எல்லாவிதமான உதவிகளும் செய்து தருவதாக உறுதி அளித்தார். இச்சொத்தை விற்ற குடும்பங்களை சேர்ந்த சுமார் 30 பேர்கள் வந்திருந்து, மாஸ்டரை சந்தித்தனர். மாஸ்டர் அவர்களுக்கு பிரசாதம் அளித்து, அவர்களுடன் புகைப்படம் எடுத்துக்கொண்டார். அப்யாசிகள் ஒரு பெரிய 'சாக்லெட் கேக்' கொண்டு வந்தனர். மாஸ்டர் அதை வெட்டிய பின் அனவருக்கும் அளிக்கப்பட்டது. மாஸ்டர் ஓய்வெடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும், அவர் சக்கர நாற்காலிலேயே அமர்ந்து காலை சிற்றுண்டி எடுத்துக்கொண்டார். அவ்விடம் முழுவதும், நெல், வாழை, தென்னை முதலியன பயிரிடப்பட்டு மிகவும் பசுமையாக இருந்தது. சில திறந்த கிணறுகளும், சில ஆழ்துளை கிணறுகளும் இருக்கின்றன. அங்குள்ள சாலைகளில் பயணித்து, முடிந்த அளவு அவ்விடத்தை பார்வையிட்டபின், மாஸ்டர் சென்னைக்கு புறப்பட்டு சென்றார்.

29ம் தேதி 'கீதா' உரையின் பின், மாஸ்டர் சிறிது நேரம் பேசினார். " இதுவரை, இம்மாதிரியான பல வகுப்புக்களில் நாம் கலந்து கொண்டிருக்கிறோம். சகோதரர் சான்ஸ்கிரீட் கண்ணன், மிக விரிவாக சுலோகங்களுக்கு விளக்கமளித்திருக்கிறார். இப்போது நாம், அவையனைத்தையும்

உள்வாங்கி, கிரகித்துக்கொள்ளும் தருணம் ஆகும். எனவே, அடுத்த இரண்டு ஞாயிறுகளிலும், ஒரு வினா-விடைப் பகுதியை நாம் வைத்துக்கொள்வோம்." என்று மாஸ்டர் கூறினார்.

## அக்டோபர் 2013




**சீன செமினார்:**

செவ்வாய் அக்டோபர் 1: சீனாவிலிருந்தும், மற்ற நாடுகளிலிருந்து வந்திருந்த சீனர்களுமாக, சுமார் 110 அப்யாசிகள், மணப்பாக்கத்தில் ஒரு கருத்தரங்குக்காக வந்திருந்தனர். மாஸ்டர் இந்த கருத்தரங்கை மிக ஆவலாக எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். 8.30 மணியளவில், மாஸ்டர், தன்னுடைய அறையிலிருந்து வெளியே வருவதற்கு முன், காட்டேஜில் கூடியிருந்த அப்யாசிகளை வரவேற்பதற்காக, மிக வேகமாக, சீன மொழியில் சில சொற்களைக் கற்றுக்கொண்டார். வெளியே நடந்து வந்த வண்ணம், அவர் சீன மொழியில் பேசியது, பலத்த கைதட்டலைப் பெற்றது. மாஸ்டர், தன்னால் சீன மொழியைக் கற்றுக் கொள்ள முடியவில்லை என்றும், இப்போது கற்றுக் கொள்ளவோ, சீனப் பயணம் மேற்கொள்ளவோ தனக்கு மிகவும் வயதாகி விட்டது என்றும் வருத்தத்துடன் தெரிவித்தார். ஒவ்வொரு வருடமும் மேலும் மேலும் நிறைய சீன அப்யாசிகள் சென்னை வருவதற்கு முயற்சி செய்யவேண்டும் என்றார். மாஸ்டர், காங்டாக்( சிக்கிம், இந்தியா) ஆசிரமத்தை பற்றி கூறி அது நல்ல ஆன்மீக ஓய்விடம் என்றும், அதை அப்யாசிகள் பயன்படுத்தலாம் என்றும் கூறினார். மாஸ்டரின் சிட்டிங்கிற்குப் பின்னர், அப்யாசிகள் DORM A இல் நடக்கும் கருத்தரங்கிற்குச் சென்றனர்.

அடுத்த நாள் மாஸ்டர், மோட்டார் சக்கர நாற்காலியிலேயே சகோதரி கீதுவின் புது வீட்டை துவக்கி வைக்க சென்றார். கருத்தரங்கின் பங்கேற்பாளர்களும் அழைக்கப்பட்டிருந்தனர். மாலையில் மாஸ்டர் காட்டேஜுக்கு திரும்பினார். மாஸ்டர் சக்கர நாற்காலியில் அடிக்கடி போய் வந்ததினால், கால்களில் கொப்புளங்கள் ஏற்பட்டு, அவை வெடித்ததால், கால்களில் மிகுந்த வலி ஏற்பட்டது. மருத்துவர்கள் கால் தோலை சிறிது நீக்கி எடுத்து சரிசெய்த பின் அந்த புண் ஆறும் வரை கால்களை உயர்த்தி வைத்துகொள்ளவேண்டியிருந்தது. ஏற்கனவே இருந்த அவருடைய உடல் நிலையில், இந்த புதிய பிரச்சனையும் ஏற்பட்டது, அதிக வருத்தத்தை தந்தது.

சகோ.பி.ஆர். கிருஷ்ணா மற்றும் சில அப்யாசிகள், அக்டோபர் 4ம் தேதி, திருவள்ளூரில் வாங்கியுள்ள நிலத்தை பார்த்து அதன் முதல்நிலைத் திட்டத்தை முடிவு செய்ய அங்கு சென்றனர். மாஸ்டர், தற்சமயம் விவசாயத்திற்கு மட்டுமே பயன்படுத்த எண்ணியுள்ள அந்த நிலத்தின் அனைத்து விஷயங்களையும், சகோ.பி.ஆர்.கிருஷ்ணா கவனிக்க இருக்கிறார்.

மாஸ்டர் சனிக்கிழமை காலையில் சந்திக்க இருப்பதாக இருந்த கருத்தரங்கின் அப்யாசிகளை, உடல் நிலை சரி




இல்லாததினால் சந்திக்க முடியாமல் போனாலும், அன்று புறப்பட இருந்த, சுமார் 20 அப்யாசிகளைச் சந்தித்தார். சகோ. கமலேஷ் DORM A இல் இருந்த அப்யாசிகளுக்கு சத்சங்கத்தை நடத்தி, உரையாற்றினார்.

ஞாயிற்றுக்கிழமை அன்று தனது உடல் நிலை காரணமாக, சகோ.கமலேஷை தியானக் கூடத்திலும், சகோ.கிருஷ்ணாவை, கருத்தரங்கின் அப்யாசிகளுக்காக காட்டேஜிலும் நடத்தச் சொன்னார். சத்சங்கங்கள் முடிந்தவுடன், அக்குழுவைச் சந்தித்து சிறிது நேரம் செலவிட அவர் வெளியில் வந்தார். அந்த சூழல், மாஸ்டரின் அன்பினால் நிரம்பியிருந்தது. பல அப்யாசிகள் கண்ணீருடன் காணப்பட்டனர். மாஸ்டர், அப்யாசிகளின் இதயங்களை ஆழமாகத் தொட்டு நெகிழச்செய்தார்.

மாஸ்டர், சமையலறைக் குழுவை, இனிப்புகளும், கொழுக்கட்டைகளும் தயார் செய்து அனைவருக்கும் கொடுக்கச் செய்தார். சீனா மற்றும், வியட்நாமைச் சேர்ந்த அப்யாசிகள் ஒரு சிறிய கலை நிகழ்ச்சியை நடத்தினர். இந்தக் கருத்தரங்கில், மாஸ்டர், தன்னுடையது



அனைத்தையும் கொடுத்துவிட்டதை ஒருவரால் உணர முடிந்தது. உடல் நலமின்றி இருந்தபோதிலும், அன்று விடைபெற்றுச் செல்லும் அப்யாசிகளுடன் நேரத்தைச் செலவிட்டார்.

சைனீஸ் மொழியைப் பற்றி பேசுகையில், மாஸ்டர், "ஒரு மனநிலைக்கு வந்து விட்டால், நாம் எதையும் கற்றுக்கொள்ளலாம். நான் சைனீஸ் மொழி கற்றுக்கொண்டிருக்கிறேன். ஆங்கிலத்தில் 52 தொனிகள் உள்ளன. ஆனால் சைனீஸ் மொழியில் நான்கு தொனிகளே உள்ளன. சைனீஸ் மொழி மிகவும் ரம்மியமானது; மிகவும் அர்த்தமுள்ளது. உதாரணமாக, சைனீஸ் மொழியில் 'மகிழ்ச்சி' என்ற வார்த்தை இரண்டு எழுத்துகளிலேயே குறிப்பிடப்படுகிறது. அதனுடைய சரியான அர்த்தம் 'உங்களுடைய இதயத்தை திறவுங்கள்' என்பதாகும்." என்று கூறினார்.

அக்டோபர் 7-ம் தேதி சைனீஸ் கருத்தரங்கின் கடைசி நாள். மாஸ்டர், பங்கேற்றவர்களுக்கு, 45 நிமிடங்களுக்கு ஒரு சிட்டிங் வழங்கினார். சிட்டிங் முடிந்தவுடன் மாஸ்டர் மிகவும் களைப்பாக இருந்தார். ஆனாலும் அவர் சில அப்யாசிகளை சந்தித்துப் பேசினார். பின்பு ஓய்வு எடுக்கச் சென்றார். மாலையில் 'கன்ஹா' திட்டத்தில் வேலை செய்யும் அப்யாசிகள் வந்தார்கள். மாஸ்டர், அவர்களுடன் ஒரு சந்திப்புக்குப் பின், அவர்களுக்கு சிட்டிங் கொடுத்தார்.

"ஒவ்வொருவருக்கும் வாழ்க்கை உள்ளது. ஆனால் நாம் அந்த வாழ்க்கையில் உயிரோட்டத்தைத் தேட வேண்டும். அது இறுதியில், அதனுடைய சாராம்சத்துடன் இணைந்து ஒன்றாகும்."

*கம்ப்ளீட் ஒர்க்ஸ் ஆ~ஃப் ராம்சந்த்ரா, பாகம்-3 பக்கம்-147*



## சகோ.கமலேஷ் பட்டேல் அவர்களின் குஜராத் பயணம்

சகோ. கமலேஷ் பட்டேல் அவர்கள், செப்டம்பர் 11-ம் தேதி அன்று அகமதாபாத் வந்தடைந்தார். இது அவருடைய தனிப்பட்ட பயணமாக இருந்தாலும், அவர், இந்த பயணத்தின் போது குஜராத்தின் பெரிய மையங்களுக்கு வருகை புரிந்தார். 15-ம் தேதி அவர் அகமதாபாத், அதாலஜ் ஆசிரமத்தில் சத்சங்கம் நடத்தினார். அப்போது 900 அப்யாசிகள் குழுமியிருந்தனர். அவர் தினமும் பயிற்சி செய்வதின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி உரை நிகழ்த்தினார். மேலும், அவர் நம் உணர்வுநிலையை தூய்மையானதாகவும், கூர் உணர்வுத் திறன் உள்ளதாகவும் ஆக்க வேண்டும் என்றும், அதற்காக நாம் தியானம் செய்கிறோம் என்றும் விளக்கினார். அவர் அகமதாபாதில், குறிப்பிட்ட எண்ணிக்கை மட்டுமே உள்ள, ஆழ்ந்த மறைபொருள் சின்ன பதக்கத்தை (Esoteric Symbol Pendant) அறிமுகப்படுத்தினார். மேலும் அவர் பல்வேறு மையங்களில் இருந்து வந்த அப்யாசி குழுக்களை சந்தித்துப் பேசினார்.

16-ம் தேதி அவர் கமல்பூருக்கு வருகை தந்தார். செவ்வாய்கிழமை அவர் பாவ்நகருக்கு புறப்பட்டார். மாஸ்டரோடு அவர் இருந்த முக்கியமான தருணம் பற்றி கேட்கப்பட்டது. அதற்கு அவர், மாஸ்டரின் பிரதிநிதியாக தான் அறிவிக்கப்பட்ட போது தான் என்றார். பிறகு அவர் வதோதரா மற்றும் சூரத் புறப்பட்டு சென்றார்.

சூரத்தில் நடைபெற்ற கேள்வி-பதில் பகுதியில், அவர் சகஜ மார்க்க பயிற்சியின் பல்வேறு அம்சங்கள் குறித்து விளக்கினார். ஒரு அப்யாசி, சூரத் மையத்திற்காக தியான மண்டபத்தை நன்கொடையாக வழங்குவதை ஏற்றுக்கொண்டார். பிறகு அவர் நவசாரி ஆசிரமத்திற்கு புறப்பட்டு சென்று அங்கிருந்து அவர் வல்சாட் ஆசிரமத்திற்கு தன் பயணத்தை தொடர்ந்தார். அங்கிருந்த அப்யாசிகளை சந்தித்தபிறகு, சத்சங்கம் நடத்திவிட்டு அன்று இரவு வதோதரா திரும்பினார்.

செப்டம்பர் 21-ம் தேதி, குஜராத்தின் பல்வேறு மையங்களில் இருந்து சுமார் 1000 அப்யாசிகள் வதோதராவில் குழுமினர். ஞாயிற்றுக்கிழமை சத்சங்கம் முடிந்தவுடன், சகஜ மார்க்க பயிற்சியோடு தொடர்புடைய நுட்பமான விஞ்ஞானம் பற்றி பேசினார். மறுநாள் அவர் ஆனந்த் மையத்திற்கு சென்று 25ம் தேதி அகமதாபாத் திரும்பினார். 27ம் தேதி அவர் அதாலஜ் ஆசிரமம் சென்று, GITP நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார். இதில், குஜராத், ராஜஸ்தான், மஹாராஷ்ட்ரா, மத்திய பிரதேசம் ஆகிய இடங்களில் இருந்து 75 அப்யாசிகள் கலந்து கொண்டனர்.



30-ம் தேதி கடி மையத்தில் சத்சங்கம் நடத்தினார். இதில் கடி, பலான்பூர், மெஹ்சானா, கலோல் மற்றும் உன்ஜா மையங்களில் இருந்து சுமார் 125 அப்யாசிகள் கலந்து கொண்டனர். இவர்களில் பெரும்பாலோனோர் புதிதாக சேர்ந்த அப்யாசிகள். சகோ. கமலேஷ் பட்டேல் அவர்களுக்கு, இதைப் போன்ற நுட்பமான முறையை, வாழ்க்கையில் ஏற்றுக்கொள்ளும் முக்கியத்துவத்தைப் பற்றி விளக்கினார். பிறகு அகமதாபாத் புறப்படும் முன் சிறிது நேரம் கலோல் அப்யாசிகளுடன் இருந்தார். அக்டோபர் 2-ம் தேதி அவர் குஜராத் பயணத்தை முடித்துக்கொண்டு சென்னை புறப்பட்டார்.





## ஆசிரம நிர்வாகம் பற்றிய நிகழ்ச்சி

ஆகஸ்ட் 20 முதல் 24 வரை, ஐந்து நாள் நிகழ்ச்சி ஒன்று மணப்பாக்கம் ஆசிரமத்தில் நடைபெற்றது. அதில் ஆசிரம நிர்வாகிகள், ஆர்வமுடைய தொண்டர்கள் மற்றும் மையப்பொறுப்பாளர்கள் என சுமார் 45 பேர் பங்கேற்றனர். இந்த நிகழ்ச்சி மாஸ்டரால் ஊக்குவிக்கப்பட்டது. அவர் ஆசிரம நிர்வாகத்தை, தனித்திறச் செயலாண்மையின் (professionalized) அணுகுமுறையில் நிர்வகிப்பதைக் காண வேண்டும் என்று சுட்டிக்காட்டினார். ஒவ்வொரு நாளும் ஒரு கருப்பொருளுடன் நிகழ்ச்சி நடைபெற்றது. அவை, ஆசிரமம் குறித்த ஒரு தொலைநோக்கு பார்வையை ஏற்படுத்துதல், ஆசிரமத்தை சரியான முறையில் பயன்படுத்துவதற்கான யோசனைகள், ஆன்மீகத்தை நாடுபவர்களுக்குச் சேவை செய்யும் விதத்தில் நமது ஆசிரமங்களை ஒருங்கமைத்தல், ஆசிரமங்களைக் கண்காணித்தல் மற்றும் நம் ஆசிரமங்களின் செயல்பாட்டில், பரஸ்பர நம்பிக்கை மற்றும் மரியாதை போன்ற பண்பாட்டின் மென்மையான பக்கத்தை உருவாக்குதல் என்பவையாகும். இந்த நிகழ்ச்சியில் சத்சங்கங்கள், உரைகள், தொகுப்புகள், மாஸ்டரின் ஒளிப் பதிவுகள், குழு விவாதங்கள் மற்றும் மிக முக்கியமாக மணப்பாக்க ஆசிரமத்தின் 32 துறைகளுக்கும் சென்று பார்வையிடுதல் ஆகியவைகள் இடம் பெற்றன.

இரண்டாம் நாளன்று சகோதரர் கமலேஷ் அவர்கள் ஆசிரமத்தில் எந்த மாதிரியான நிகழ்ச்சிகளை ஊக்குவிப்பது, வரவேற்பது மற்றும் இதமான சூழ்நிலையை நாம் எப்படி உருவாக்குவது என்பது குறித்து தனது எண்ணங்களை பகிர்ந்து கொண்டார். தனது உடல் நலக்குறைவால் ஏற்பட்ட அசௌகரியம் இருப்பினும், மாஸ்டர் கடைசி இரண்டு நாட்கள் பங்கேற்பாளர்களிடையே உரையாற்றினார். நிறைவு நாளன்று, அவர் சத்சங்கத்தை நடத்திவிட்டு உரையாற்றினார். அதில் அவர், ஆசிரம பராமரிப்பு உண்மையில் ஒவ்வொருவருடைய அக பராமரிப்பில் துவங்குகிறது என்றும் நாம் ஒவ்வொருவரும் நமது இதயங்களில் ஆசிரமத்தை உருவாக்க வேண்டும் என்று வலிவுறுத்தினார். ஆசிரம பராமரிப்பு என்பது சகஜ மார்க்க வழி வாழ்தலின் முழுமையை குறிக்கிறது என்று கூறினார்.



## புது மையம் - பசோர், மத்திய பிரதேசம்

அக்டோபர் 2 அன்று மத்திய பிரதேசத்தின் ராஜ்கர் மாவட்டத்தின் பசோரில் ஒரு வரவேற்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இது, பசோர் மற்றும் அருகிலிருக்கும் கிராமங்களிலிருந்து வந்திருந்த சுமார் 150 ஆர்வலர்களுக்கு நடத்தப்பட்டது. சகோதரி ருச்சி ஸ்ரீவஸ்தவாவின் அறிமுக உரையைத் தொடர்ந்து, சகோதரர் பிரபாகர் தாஸ் ஆன்மீகத்தின் தேவை, சகஜ மார்க்க மாஸ்டர்கள், மற்றும் மிஷனின் சேவைகள் ஆகியவை பற்றி உரையாற்றினார். சகோதரி சங்கீதா தாஸ் சாதனாவின் பல்வேறு விஷயங்களையும் மற்றும் நமது அன்றாட வாழ்வில் அதன் தாக்கத்தையும் பற்றி பேசினார். திட்டமிடப்படாத ஒரு கலந்துரையாடல் நிகழ்ச்சியை தொடர்ந்து 25 ஆர்வலர்கள் பயிற்சியை தொடங்குவது குறித்து தங்களது விருப்பத்தை தெரிவித்தனர். அவர்கள் அனைவருக்கும், அவர்களது பொறுப்பு பற்றியும், பயிற்சியில் அவர்களிடம் எதிர்பார்க்கப்படும் ஈடுபாடு பற்றியும் விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. இதில் 10 பேர் உடனடியாகவும், மற்றவர்கள் அடுத்த வாரத்திலும் சிட்டிங் எடுத்துக் கொண்டனர். இவ்வாறாக, மத்திய பிரதேசத்தின் இந்த பகுதியில், ஒரு புது மையம் மிக இயல்பான வழியில் உருவாகியது.

## கொலகாலுருவில் மண்டல ஆசிரமம், ஆந்திரப் பிரதேசம்

குண்டூரின் காஜிபேடாவில், ரியல் எஸ்டேட் நிறுவனம் M.G.சகோதரர்கள், விஜயவாடா, குண்டூர், தெனாலி மற்றும் மங்களகிரியில் உள்ள அப்யாசிகளின் ஆன்மீக தேவைக்காக, சுமார் 50 ஏக்கர் நிலத்தை வாங்கினர். அதில் ஏறத்தாழ 18.75 ஏக்கர் நிலம் ஆசிரமத்திற்காகவும், மீதமிருக்கும் நிலம், ஸ்ரீபார்த்தசாரதி நகர் அப்யாசிகள் குடியிருப்பு வளாகத்திற்காகவும் ஒதுக்கப்பட்டது.

2 பிப்ரவரி 2012 அன்று, மாஸ்டரின் ஆசியோடு, மண்டலப் பொறுப்பாளர் சகோதரர் மது கோதபள்ளி, ஆசிரமத்திற்கான அடிக்கல்லை நாட்டினார். செப்டம்பர் 8 அன்று, காலை 11.00 மணி அளவில் மாஸ்டர் சென்னையிலிருந்து நேரடி ஒளி பரப்பாக, ஆசிரமத்தைத் தொடங்கி வைத்தார். இது பூஜ்ய பாபூஜி மகராஜ் அவர்களுக்கு அர்ப்பணிக்கப்பட்டது. மாஸ்டர் ஆசிரமங்கள் முழுமையாக பயன்படுத்தப்பட வேண்டுமென்றும், அது மாணவர்களில்லாத பள்ளிக்கூடமாக இருக்க கூடாது என்றும் குறிப்பிட்டார். கொலகலுருவின் அப்யாசிகள், உளமார்ந்த இதயங்களோடு இந்த விழாவை கொண்டாடினர். வழக்கம் போல சத்சங்கங்கள் மற்றும் முழுநாள் நிகழ்ச்சிகள் இப்போது இங்கே நடத்தப்படுகின்றன.

## இளைஞர் நிகழ்ச்சிகள்

### அஹ்மத் நகர், மஹாராஷ்ட்ரா



அக்டோபர் 6 அன்று, சகோதரிகளால் சமைக்கப்பட்ட சிறந்த மதிய உணவை முடித்த பின், எ~ஃபோர்ட்ஸ் கோளரங்கத்தைக் காண, 22 இளைஞர்கள் கொண்ட குழு சென்றது. கோளரங்கத்திற்கு சென்று, முன்பதிவை முடித்த பிறகு, தங்களுக்குள் அறிமுகச் சுற்றைத் தொடர்ந்து, வார்த்தைகளுக்கு அசைவுகளைக் காட்டி கண்டுபிடிக்கும் ஒரு விளையாட்டு விளையாடப்பட்டது. வார்த்தைகளை நினைவு படுத்தும் சொற்கள் மிஷன் புத்தகங்களிலிருந்து எடுக்கப்பட்டிருந்தன. வார்த்தைகளின்றி இதயப்பூர்வமாக விஷயங்களை வெளிப்படுத்த இந்த விளையாட்டு சிறந்த உதாரணம். இதனை அடுத்து கோளரங்க நிகழ்ச்சி தொடர்ந்தது. இது அண்டம், கோள்கள் மற்றும் நட்சத்திரங்களை பற்றி நிறைய விளக்கங்களுடன் சிறந்த அறிவைப் புகட்டியது. இவ்வாறு அனைவரும் சென்றது, அப்யாசிகளிடம் ஒரு இணைப்பையும், சகோதரத்துவத்தையும் ஏற்படுத்தியது.

### பில்வாரா, ராஜஸ்தான்

மாதாந்திர இளைஞர் நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக, ஆகஸ்ட்25ம் நாள், 12 இளைஞர்களும், இரு குழந்தைகளும், ஹார்னி மஹாதேவுக்கு சிற்றுலா சென்றிருந்தனர். சகஜ மார்க்க பயிற்சியை எவ்வாறு துவங்கினார்கள் என்பதைப் பற்றியும், தங்களின் லட்சியம் பற்றியும் தங்களது அனுபவங்களை அவர்கள் பகிர்ந்து கொண்டனர். இதன் மூலம் நிஜமான லட்சியம் பற்றி தாங்கள் அறியாமலிருப்பதை, நிறைய பேர் உணர்ந்தனர். இந்த தலைப்பில், மிஷன் புத்தகங்களிலிருந்து சில பகுதிகள் படிக்கப்பட்டன. இந்த தலைப்பில் மேலும் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்று உணரப்பட்டது. ஆகவே அனைத்து இளைஞர்களும், ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும், சத்சங்கத்திற்கு பிறகு, 15-20 நிமிடம், தியான அறையிலேயே அமர்ந்து தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள முடிவு செய்தனர்.



### ஐக்கிய நாட்டு சர்வதேச இளைஞர் தினம் -



### இணையதள கருத்தரங்கு (Webinar)

12 டிசம்பர் 2005 அன்று, ஐக்கிய நாடுகளின் பொது தகவல் பிரிவுடன் (UN DPI) SRCM, ஒரு அரசு சாரா நிறுவனமாக (NGO) தன்னை இணைத்துக் கொண்டது. ஜாதி, நிறம், சமயம், மதம், நாடு மற்றும் இனம் போன்ற வேறுபாடு இல்லாமல், பரஸ்பரம் அன்பு உணர்வு, உலகளாவிய சகோதரத்துவம் ஆகியவற்றை வளர்ப்பதே இதன் முக்கிய குறிக்கோளாகும். 17 ஆகஸ்ட் 2013 அன்று, ஐக்கிய நாட்டு சர்வதேச இளைஞர் தினத்தை முன்னிட்டு, 'உலகளாவிய பிரார்த்தனை - அன்பு, மாற்றத்திற்கான மூலப்பொருள்' என்ற தலைப்பில் இணையதள கருத்தரங்கு நடைபெற்றது. இதில் அனைத்து நாடுகளிலிருந்தும், 4649 பேர் பங்கு கொண்டனர். பிரேசிலின், சவோ பவலோவைச் சேர்ந்த சகோ.அன்ட்ரே பர்ரெட்டோ அவர்களின் தொடக்க உரையுடன் நிகழ்ச்சி தொடங்கி, பின் இளைஞர்களுக்கு மாஸ்டர் ஆற்றிய சிறு உரையும் ஒளிபரப்பப்பட்டது. பாரிஸைச் சேர்ந்த சகோதரி எக்தா பவுடர்லிக், UNDPI உடன் SRCM ன் தொடர்பு பற்றிய தொகுப்பு ஒன்றை வழங்கினார். சகோ.ரிஷப் கோத்தாரி, நவம்பர் 17, 1999 அன்று பாபூஜி மகராஜிடமிருந்து வந்திருந்த விஸ்பர்ஸ் செய்தியைப் படித்துவிட்டு, இந்த கருத்தரங்கின் கருப்பொருளைப் பற்றி பேசினார்.

உரைகளுக்கு பின் நடந்த கேள்வி-பதில் நிகழ்ச்சியில், சகோ.ரிஷப் மற்றும் சகோதரி எக்தா, பங்கேற்பாளர்களிடமிருந்து வந்த கேள்விகளுக்கு பதிலளித்தனர். இளைஞர்கள் தங்களின் அனுபவங்களையும், எதிர்கொள்ளும் சவால்களையும் பகிர்ந்து கொள்ள இந்த இணையதள கருத்தரங்கு ஒரு வாய்ப்பாக அமைந்தது. மணப்பாக்கத்தில் 150 LMOIS மாணவர்களையும் சேர்த்து சுமார் 200 பங்கேற்பாளர்கள் ஒன்று கூடியிருந்தனர்.

இணையதள கருத்தரங்கின் இறுதியில் செய்யப்பட்ட உலகளாவிய பிரார்த்தனை, இந்நிகழ்ச்சிக்கு, இதயத்தைத் தொடும் ஒரு செயல்முறை சம்பவமாகவே இருந்தது. அன்புடன் கூடிய மாற்றத்தைக் கொண்டு வரும் கருவியாக பிரார்த்தனை உள்ளது என்பதன் முக்கியத்துவத்தை உலகின் வெவ்வேறு கலாச்சாரத்தினரும் உணர்ந்தனர். இணையதள கருத்தரங்கு முடிந்த பிறகு, உலகின் பல மையங்களிலிருந்தும், ஆசிரமங்களிலிருந்தும், பிரார்த்தனை செய்த பலர், தெரிவித்தது என்னவெனில், மேலும் சிறந்த உலகை உருவாக்க வேண்டும் என்கிற அவர்களது குறிக்கோளில், அனைவரும் இணைந்து, அதற்கு உறுதுணையாக இருப்பதை உணர்ந்ததாகத் தெரிவித்தனர்.

## பிரசெப்டர்கள் கூட்டம்






### திருச்சி, தமிழ்நாடு

மண்டல பொறுப்பாளர் சகோ. முருகன் (தமிழ்நாடு மண்டலம் 2A) பல்வேறு பகுதிகளிருந்தும் வந்திருந்த பிரசெப்டர்கள், இந்தியா பொறுப்பாளர் சகோ. ராஜேஷ் ராதோட் உள்ளடங்கிய கூட்டம் 21 ம் தேதி திருச்சியில் நடந்தது. இந்த நாள் காலை 7.30 மணி சத்சங்கத்துடன் தொடங்கியது. அதன் பிறகு, திருச்சியில்,2013, 23 ஜனவரி அன்று, "பிரசெப்டர்களின் அனுபவங்களை ஆழப்படுத்துதல்" நிகழ்ச்சியில் மாஸ்டர் அளித்த "சிட்டிங்குகள் எவ்வாறு அளிப்பது" என்ற வீடியோ ஒளிபரப்பப்பட்டது. அதன் பிறகு, "உங்கள் மையத்தின் சிறப்பு என்று நீங்கள் எதை உணர்கிறீர்கள்?" மற்றும் "கடந்த ஒரு வருடமாக மையத்தில் மாற்றம் கொண்டு வர நீங்கள் புதிதாக அறிமுகப்படுத்தியவை யாவை?" என்பவை பற்றிய ஒரு குழுக் கலந்துரையாடல் நடைபெற்றது. ஒவ்வொருவரும் அவரவரது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். இந்த பயனுள்ள குழுவிவாதம், அனைவருக்கும், மற்ற மையங்களிலிருந்தும் கற்றுக்கொள்ள ஒரு உள் தூண்டுதல் மற்றும் ஒரு வாய்ப்பைக் கொடுத்தது. பிறகு சகோ.முருகன் மண்டலம் 2A யின் ஒட்டு மொத்த விவரத்தைப் பற்றியும், அதன் செயல்பாடுகள் மற்றும் அங்கு வந்துள்ள ஒவ்வொருவரிடமிருந்தும் என்ன எதிர்பார்க்கப்பட்டது என்பதைப் பற்றியும் கருத்துரை வழங்கினார். பிற்பகலில், வாய்ப்புக்கள் மற்றும் கவனிக்கப்படவேண்டிய பகுதிகள் பற்றிய கலந்துரையாடல் இருந்தது. சகோ. ராஜேஷ் பல விஷயங்களை தெளிவுபடுத்தினார். "சிறந்த பிரசெப்டர்களாக உருவாவது எப்படி" என்ற மாஸ்டரின் வீடியோ ஒளி பரப்பப்பட்டது. இந்த நிகழ்ச்சி மாலை 6 மணி சத்சங்கத்துடன் நிறைவுபெற்றது.

### லக்னோ, உத்திரப்பிரதேசம்

செப்டம்பர் 28-29 இரண்டு நாட்கள், மண்டல அளவிலான கூட்டம், லக்னோ பாபூஜி மெமோரியல் ஆசிரமத்தில் உத்திரப்பிரதேச மண்டலத்தை சுற்றிலுமுள்ள 100 பிரசெப்டர்களுக்கு, செயலாளர் சகோ.யு.எஸ்.பாஜ்பாய் முன்னிலையில் நடைபெற்றது. சகோ.அசோக் கார்க்(மண்டல பொறுப்பாளர்) அனைவரையும் வரவேற்று, பணிமனையின் முழு பயனையும் பெற திறந்த இதயம் மற்றும் திறந்த மனதுடன் இருக்க வேண்டியதன் தேவையை வலியுறுத்தினார். மாஸ்டரின் DVD உரைகளான, "சிறந்த பிரசெப்டர்களாக உருவாதல்", சிட்டிங் எவ்வாறு கொடுப்பது" "ஒழுங்கு முறைக்கட்டுப்பாட்டின் தேவை" ஆகியவை ஒளி பரப்பப்பட்டன. சகோ.நீதிபதி ஆர்.ஆர்.கே.திரிவேதி "பிரசெப்டரின் பங்கு" பற்றிய உரையையும், சகோ.கே.கே.சக்ஸேனா பிரசெப்டர் வழிகாட்டியிலிருந்து குறிப்புகளையும் வழங்கினர். சகோ.ஆஷிஷ் சிங், பிரசெப்டர்கள், அன்பு, சகோதரத்துவம் மற்றும் ஒத்திசைவுடன் பணிபுரியும், உண்மையும், அர்ப்பணிப்புமுள்ள அப்யாசிகளாக மாறுவதற்கு ஊக்கப்படுத்தினார். சகோ.பிரியதர்சினி திருச்சி நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டு, 'பிரசெப்டர்களின் அனுபவங்களை ஆழப்படுத்துதல்' பற்றிப் பேசினார். சகோ.ஒ.பி.கலியா மற்றும் ஆர்.எஸ்.எல்.ஸ்ரீவஸ்தவா, மையங்களின் வரலாற்றின் மீது எவ்வாறு பணியாற்றுவது என்பதைப் பற்றி விளக்கினர். மண்டல பொறுப்பாளர் சகோ.அசோக் கர்க், மையங்களைப் பார்வையிட்ட அறிக்கையை வாசித்தார். சகோ.யு.எஸ்.பாஜ்பாய், இந்த பணிமனையை ஏற்பாடு செய்ததற்காக, சகோ. அசோக் க்ர்க்கிற்கு நன்றி தெரிவித்து நிகழ்ச்சியை நிறைவு செய்தார். அனைத்து பிரசெப்டர்களும் முழுமையாக சக்தியூட்டப் பெற்று, சிறந்த பிரசெப்டர்களாக மாறுவதற்கான உள்ளார்ந்த ஈடுபாட்டுடன் விடைபெற்றனர்.

---

### மங்களூர், கர்நாடகா

செப்டம்பர் 1 அன்று, சகோ.மோகன்தாஸ் "நம் உள்நிலையை எவ்வாறு ஆராய்வது" என்பது குறித்த முகாம் ஒன்றினை நடத்தினார். நாட்குறிப்பு எழுதுதல் மூலம் விழிப்புணர்வு மற்றும் கூருணர்வுத்திறனை வளர்த்துக் கொள்வதன் அவசியத்தை விளக்கினார். அப்யாசிகள் நாட்குறிப்பில், நேரம் மற்றும் இடம் பற்றிய விழிப்புணர்வு, ஆழம், கிரகித்தல், அமைதி, சத்சங்கத்தின்போதும் அதன் பிறகும் உணரப்பட்ட சலனமற்ற நிலை பற்றிக் குறிப்பிட வேண்டும் என்று விளக்கினார். நாட்குறிப்பு எழுதுதல் நம்மை நாமே சுத்திகரித்துக்கொள்ள ஒரு ஆக்கப்பூர்வமான ஆயுதம் என்றும், மேலும் உள்ளுணர்தலை விழிப்பூட்டுவதற்குமான சிறந்த ஒரு கருவி எனக் கூறினார். உள்நிலை மற்றும் அனுபவம் இரண்டும் வித்தியாசமானது. உள்நிலை என்பது உளதாயிருக்கும் நிலை. "தவிப்பை வளர்த்துக் கொள்வதற்கான வழிகளும் வழிமுறைகளும்" பற்றிய ஒரு கலந்துரையாடல் நடைபெற்றது. அப்யாசிகள் முதல் மூன்று சிட்டிங்குகள் எடுப்பதற்கு முன்பும், எடுத்த பின்பும் பெற்ற அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர். சகோ.மோகன்தாஸ் சாதனாவில் சரியான மனப்பான்மையை கடைப்பிடிப்பதன் அவசியத்தையும், குறிப்பாக இயந்திரத்தனமான பயிற்சியை தவிர்த்து, நமது முழு ஈடுபாடு நிறைந்த இதயத்துடன் இதைச் செய்ய வேண்டும் என்பதைப் பற்றியும் விளக்கினார். நாம் சாத்தியமாகும் போதெல்லாம் மாஸ்டரை சந்தித்து, உள்முகத்தொடர்பு மற்றும் உறவுமுறையைப் பராமரித்து வரவேண்டும். இவை, தவிப்பை வளர்த்துக் கொள்வதற்கான உறுதியான அம்சங்களாகும்.





## மனன நிகழ்ச்சி - திப்தூர், கர்நாடகா

செப்டம்பர் 14, 15 ம் தேதிகளில், கர்நாடகாவின் திப்தூரில், ’சாதனேய சிந்தனா ஷிபிரா’ என்ற நிகழ்ச்சி, கன்னட மொழியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சடங்குகளைக் கடந்து செல்லுதல், பயிற்சியில் உள்ள குறைபாடுகளைத் தவிர்த்து, அதைப் பற்றிய ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துதல், மற்றும் தனி மனிதப் பண்புகளை வளர்த்துக் கொள்ள சுயபரிசோதனை செய்தல் ஆகியவற்றுக்கான உதவியை அப்யாசிகளுக்குச் செய்யும் கருத்துடன் நிகழ்த்தப்பட்ட நிகழ்ச்சியில், சுமார் 40 அப்யாசிகள் பங்கேற்றனர். இந்த நிகழ்ச்சி நமது மார்க்கத்தைப் பற்றியும், பயிற்சியைப் பற்றியும் சிறந்த புரிந்து கொள்ளுதலைக் கொடுத்ததாக இதில் கலந்து கொண்ட அப்யாசிகள் உணர்ந்தனர். அவர்களது பரிந்துரைகளும் ஊக்கமூட்டுவதாக இருந்தன. அந்த நிகழ்ச்சி சகோ. B. ஸ்ரீனிவாசா மற்றும் Dr. கிருஷ்ணமூர்த்தி ஆகியோரால் நடத்தப்பட்டது.

## தும்குன்டா ஆசிரமம், ஹைதராபாத்

இந்த மண்டல ஆசிரமத்தில், ஒவ்வொரு மாதமும் முதல் சனிக்கிழமையன்று, அப்யாசிகள் ஒன்று சேர்ந்து கலந்து கொள்ளும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. அக்டோபர் 5 ம் தேதி இந்த நிகழ்ச்சி தொடங்கி இரண்டாண்டு நிறைவு பெறுகிறது. இந்த நிகழ்ச்சியில் பொதுவாக, மாஸ்டரின் ஒலி, ஒளிக்காட்சி களைப் பார்த்தல், சகஜ மார்க்கத்தின் பல்வேறு அம்சங்கள் பற்றி விவாதித்தல், பேச்சாளர்களின் பகிர்ந்தளித்தல்கள், விஸ்பர்ஸ் செய்திகள் வாசித்தல் மற்றும் நல்ல திரைப்படங்களைக் காணுதல் போன்றவை இருக்கும். மாஸ்டரைப் பார்க்கச் செல்லும் அப்யாசிகளும், க்ரெஸ்ட், ரிட்ரீட் மையங்கள் போன்றவற்றிற்குச் செல்லும் அப்யாசிகளும், அவர்களது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வார்கள். இந்த நிகழ்ச்சிகள், அங்கே தங்கியிருக்கும் அப்யாசிகளிடையே, நல்லுறவு, மற்றும் ஒன்றுபடும் தன்மை ஆகியவை உருவாக்குவதற்கு கருவிகளாக இருந்து வருகின்றன. இங்கே தங்கியிருக்கும் அப்யாசிகள், இந்த நிகழ்ச்சிகளில் மிகுந்த ஆர்வத்துடன் கலந்து கொள்கிறார்கள்.



## கும்பகோணம், தமிழ்நாடு

"இலக்கியத்திலிருந்து கற்றுக்கொள்தல்" என்னும் நிகழ்ச்சி, மண்டல பொறுப்பாளர் சகோ. B.S. முருகன் அவர்களால், மிஷனின் இலக்கியங்களை வாசிக்கும் ஆர்வத்தைக் உண்டாக்கவும், குழுவாக வளர்ச்சியடைந்து, செயல்படுவதற்கான ஒரு வாய்ப்பை நல்குவதற்கும், முன்மொழியப்பட்டது.

துவக்கத்தில் இந்த நிகழ்ச்சி திருச்சியில், ஜூலை 27 ம் தேதி நடத்தப்பட்டது. இதில் சுமார் 60 அப்யாசிகள், 22 மையங்களிலிருந்து கலந்து கொண்டனர். இந்த மண்டலமானது 14 தொகுதிகளாக வகைப்படுத்தப்பட்டு. ஒவ்வொரு தொகுதிக்கும் 5 அல்லது 6 மையங்களும், ஒரு ஒருங்கிணைப்பாளரும் இருக்கின்றனர். தொகுதி எண் 5 ல் கும்பகோணம், காரைக்கால், திருவாரூர், நாகைப்பட்டினம், குடவாசல், மற்றும் மயிலாடுதுறை ஆகிய இடங்கள் உள்ளன. அவை இணைந்து, நடத்திய முதல் கூட்டம், செப்டம்பர் 8 ம் தேதி கும்பகோணத்தில் நடைபெற்றது. 23 அப்யாசிகள், "சத்யோதயம்" புத்தகத்தை வாசிப்பதற்கு எடுத்துக் கொண்டனர். பங்கேற்றவர்கள் புத்தகத்திலிருந்து கற்றுக்கொள்வதற்கு மிகுந்த ஆர்வம் காண்பித்தனர். இந்த நிகழ்ச்சி, அவர்களது புரிந்து கொள்தலை மேம்பாடடையச் செய்வதற்கு உதவி புரிந்தததாகக் காணப்பட்டது.

## அஞ்சட், மத்தியப் பிரதேசம்

செப்டம்பர் 8 ம் தேதி, அஞ்சட் மையத்தில், சகஜ மார்க்க சாதனையின் பல்வேறு அம்சங்களைப் பற்றிய நிகழ்ச்சியும், ’நமது நிலைமையை கூருணர்ந்து அதனைத் தக்க வைத்துக்கொள்ளுதல்’, பற்றிய ஒரு சிறப்பு நிகழ்ச்சியும் ஒருங்கிணைக்கப்பட்டது. அஞ்சட், தாவனா, திக்ரி மற்றும் பாத்வானி ஆகிய மையங்களிலிருந்து வந்திருந்த சுமார் 40 அப்யாசிகளுக்கு, இந்தூர் மையத்திலிருந்து வந்திருந்த சகோதரர்கள் ராஜேஷ், ஷைலேந்திரா, மற்றும் நீலேஷ் ஷர்மா ஆகியோர்களால் இந்நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இலட்சியத்தை அமைத்துக் கொள்வதன் முக்கியத்துவம் பற்றி உரையாடப்பட்டது. "தற்சமயம் நான் எப்படி என்னுடைய தியானத்தையும் சுத்திகரிப்பையும் செய்கிறேன்" என்பதைப் பற்றிய ஒரு சிறிய சுயசோதனைப் பகுதியும், அதனைத் தொடர்ந்து, மாஸ்டரால் வழங்கப்பட்ட பயிற்சியைப் பற்றிய ஒரு தொகுப்பும், பங்கேற்பாளர்களுக்கு தங்கள் பயிற்சி முறையில் இருந்த குறைகளைத் திருத்தியமைத்துக் கொள்வதற்கு உதவியாக இருந்தன. தங்களுடைய நிலைமையைத் தக்க வைத்துக் கொள்வதற்கான முக்கியத்துவம் பற்றிய பகுதியில், அவர்கள் தங்களின் நிலைமையை, சில நிமிடங்களுக்கு கூருணர்ந்து பார்க்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர். அதனைத் தொடர்ந்து சுமார் 15 நிமிடங்களுக்கு தியானம் செய்தபின், மறுபடியும் சில நிமிடங்களுக்கு அமைதியாக அமர்ந்து, தங்கள் நிலைமையில் ஏற்பட்டிருக்கும் மாற்றத்தை உணரும்படியும், அதன் பின் நாளேட்டில் எழுத முயற்சி செய்யும்படியும் கேட்டுக் கொள்ளப்பட்டனர். கூறுணர்வுத்திறனை வளர்த்துக் கொள்ளுதல் மற்றும் விழிப்பு நிலை போன்றவற்றின் முக்கியத்துவம் எல்லோராலும் உணரப்பட்டது.

## செய்தித் துணுக்குகள்



### கொல்கத்தா

செப்டம்பர் 22ம் தேதியன்று, குழந்தைகளை வயது வாரியாகப் பிரித்து, பிரார்த்தனையை ஒப்பிப்பது, பிரார்த்தனை மற்றும் பத்து நியமங்களை மனப்பாடம் செய்து எழுதுவது போன்ற செயல்கள் வழங்கப்பட்டன. வயதில் பெரிய குழந்தைகள், அன்பு, ஒழுங்குமுறை, தியானம் போன்ற தலைப்புகளில் சிறிய கட்டுரைகளை எழுதினர். சுமார் 70 குழந்தைகள் நிகழ்ச்சியில் ஆர்வத்துடன் பங்கேற்றனர். குழந்தைகளும் மற்றும் அவர்களது பெற்றோர்களும், பிரார்த்தனையையும் பத்து நியமங்களையும் கற்பதற்கு இந்நிகழ்ச்சி ஊக்குவித்தது.



### கொல்கத்தா

செப்டம்பர் 7 ம் தேதி, லஜ்பத் பாலிகா வித்யாலயாவைச் சேர்ந்த சுமார் 58 மாணவிகள், நான்கு ஆசிரியர்கள் மற்றும் தங்கள் துணைத்தலைமை ஆசிரியருடன், பாபூஜி மெமோரியல் ஆசிரமம், கொல்கத்தாவிற்கு வருகை புரிந்தனர். அவர்களுக்கு, காலநிர்வாகம், மனிதத்தன்மை, கருணை போன்ற கருத்துக்களைச் சார்ந்த சில VBSE ஆய்வுமுறைகள் காண்பிக்கப்பட்டன. ஆசிரியர்களும் மாணவிகளும் மிஷனுடன் மேலும் இத்தகைய பரிமாற்றங்களை விரும்பினர். சில ஆசிரியர்கள் பயிற்சியைத் தொடங்க ஆர்வம் தெரிவித்தனர்.



### வதோதரா

குழந்தைகள் மையத் தொண்டர்களின் உதவியுடன் சகோ.பிட்டு பாய், அக்டோபர் 13ம் தேதி, நவராத்திரி விழாக் கொண்டாட்டத்தின் ஒரு அங்கமாக கர்பா நடனத்தை ஏற்பாடு செய்திருந்தார். சத்சங்கத்திற்குப் பிறகு சிறுவர்கள் வண்ணமயமான கர்பா உடைகளணிந்து நடனமாடியதுடன், அவர்களது பெற்றோர்களும், மற்ற பெரியோர்களும் அவர்களுடன் சேர்ந்து நடனமாட, உண்மையில் கொண்டாட்டமாக இருந்ததுடன், ஒரு மகிழ்ச்சியான சூழ்நிலையை ஏற்படுத்தியது.

### மொராதாபாத், உத்திரப்பிரதேசம்

செப்டம்பர் 22ம் தேதியன்று, டயரி எழுதுவதைப் பற்றிய ஒரு கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டது. நான்கு ஒருங்கிணைப்பாளர்கள் நடத்திக் கொடுத்த இந்நிகழ்ச்சியில் இருந்த 28 பங்கேற்பாளர்கள், மூன்று அணிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தனர். பங்கேற்பாளர்கள் எல்லோருக்கும் இது ஒரு இனிமையான அனுபவமாக இருந்ததுடன் பெரும்பாலானோர், நமது மனநிலையைப் பற்றி எப்போது டயரியில் எழுதினாலும் அது தானாகவே மாஸ்டரால் படிக்கப்படுவதாக உணர்ந்தனர். நிகழ்ச்சி, மதியம் 2.30வரை நடைபெற்றது.




### இந்தோர், மத்தியப் பிரதேசம்

ஆகஸ்ட் 31ம் தேதியன்று, இந்தோர் ஆசிரமத்தைச் சேர்ந்த ஆறு அப்யாசிகள், மாஸ்டருடன் இணைப்பு ஏற்படுத்திக்கொள்வதைப் பற்றி உள்முகச்சிந்தனை செய்யும் பொருட்டு ஒன்று கூடினர். 'மெஸேஜஸ் யூனிவர்சல்'என்ற புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்ட உரையின் ஒரு பகுதி படிக்கப்பட்டது. அவ்வுரை, மாஸ்டரை நமது ஆன்மீக இதயமாகக் கருதுவது மற்றும் அவரை உள்முகப்படுத்துவதன் அவசியத்தைப் பற்றியதாகும். அப்யாசிகள் உள்முகச்சிந்தனை செய்து தங்கள் கவனிப்பாய்வை டயரியில் எழுதிக்கொள்ள அனுமதிக்கப்பட்டனர்.

### சிக்கலி, மஹாராஷ்ட்ரா

அக்டோபர் 6ம் தேதி சுமார் 65 அப்யாசிகளுக்கு 'நிரந்தர ஸ்மரணையை'ப் பற்றிய முழு நாள் நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது. அப்யாசிகள் தயாராய் வந்து கேள்விகள் கேட்டதால் ஒரு விளக்கமான கலந்துரையாடல் நடைபெற்றது. மையப் பொறுப்பாளர் சகோ. சஞ்ஜய் லஹோடி கலந்துரையாடலை முடித்து வைத்தார்.

கடந்த இரண்டு மாதங்களாய் சிக்கலி மையம் ஒரு புதிய நிகழ்ச்சியை நடத்தி வருகிறது. மாதத்தின் மூன்றாவது ஞாயிறன்று பங்கேற்கும் அப்யாசிகள் பத்து அணிகளாகப் பிரிக்கப்படுகின்றனர். ஒவ்வொரு அணிக்கும் ஒரு புத்தகம் கொடுக்கப்பட்டு, இரண்டு குறிப்பிட்ட அத்தியாயங்களைப் படிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். மதிய உணவு இடைவேளையின் போது சகோ. துள்ஸிராம் இரண்டு அத்தியாயங்களிலிருந்தும், ஒவ்வொன்றிலும் பத்து கேள்விகள் தயாரித்து ஒரு கேள்வித்தாளை உருவாக்குகிறார். நிகழ்ச்சியின் மதியப் பகுதியில் அணிகளுக்கு கேள்வித்தாள் வழங்கப்பட்டு பதிலளிக்க ஒரு மணி நேரம் கொடுக்கப்படுகின்றது. அணிகள் பின்பு கேள்வி பதில்களை முன்னிலைப்படுத்துகின்றனர். சுமார் இரண்டு மணி நேரம் நீடிக்கும் இந்நிகழ்ச்சி அப்யாசிகள் மிஷன் புத்தகங்களைப் படிப்பதற்கு உதவுகின்றது.



## இல்லக் கூட்ட நிகழ்வுகள்



செப்டம்பர் 12 அன்று, **தானே**யில் உள்ள ஷுபாரம் டவர்ஸில் சுமார் 20 ஆர்வலர்களுக்கு, கடவுளை சிலை வடிவில் வெளியே தேடுவதற்குப் பதிலாக, அவரவரின் இதயத்தில் ஆழமான உட்பகுதியில் தேடுவதன் முக்கியத்துவம் பற்றியும், இதனை தியானத்தின் உதவியுடன் எப்படி திறம்பட செய்வது என்பதைப் பற்றியும் கூறப்பட்டது. சுமார் 5-6 பங்கேற்பாளர்கள் நேர்மறையான விளைவினை வெளிப்படுத்தினர்.





**விருதுநகரில்**, ஆகஸ்ட் 17 அன்று, காமராஜ் தொழில்நுட்பம் மற்றும் பொறியியல் கல்லூரியில், ஒரு நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சுமார் 150 மாணவர்கள் இதில் பங்கேற்றனர். சகோ. டி.கே. ஆறுமுகம் மற்றும் சகோ.பாலசுப்பிரமணியம் ஆகியோர் இந்நிகழ்வில் பேசினார்கள். பிறகு அப்யாசிகள், தியான முறையில் அதிகம் ஆர்வம் காட்டிய முதல்வரைச் சந்தித்தனர். ஆர்வமுள்ள மாணவர்களின் நன்மைக்காக, கல்லூரியிலேயே தியானப் பயிற்சியைத் துவங்குவதற்குத் தேவைப்படும் ஏற்பாடுகளைக் கூடிய விரைவில் தான் செய்து கொடுப்பதாக அவர் கூறினார்.

கடந்த பல வருடங்களாக, ஒரு டஜன் அப்யாசிகளுக்கும் குறைவான எண்ணிக்கையைக் கொண்ட ஒரு சிறிய மையம், **ஜாபுவா** ஆகும். அந்த மையத்தில் செப்டம்பர் 1 ம் தேதி அன்று, சுமார் 400 பழங்குடியின் மாணவர்கள் பயிலும், ஜாபுவா (ம.பி.) அரசு பாலிடெக்னிக் உறைவிடக் கல்லூரியில், ஒரு நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்திருந்தனர். சகோ.பிரபாகர் அவர்கள், ஆன்மீகம் மற்றும் தியானத்தின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகளுடன் மாணவர்களுக்கு விளக்கிக் கூறினார். அதற்கு அடுத்த வாரத்தில், பெயர் கொடுத்திருந்த 98 மாணவர்களுக்கும் அறிமுக சிட்டிங்குகள் வழங்க, பல்வேறு மையங்களைச் சார்ந்த பிரிபெக்ட்டுகள், அங்கு வந்தனர்.

## புதிய நியமனங்கள்

**சகோ.சுரிந்தர் ஷர்மா**
மண்டலப் பொறுப்பாளர், ஜம்மு & காஷ்மீர்

## ஓசூர் அப்யாசிகள் குடியிருப்பு

### சிறப்பான திட்டமிடல் மற்றும் செயல்படுத்துதலுக்கான ஓர் எடுத்துக்காட்டு



தேவையான உள்கட்டமைப்பு வசதி மற்றும் அப்யாசிகளின் தரமான வாழ்க்கைக்கேற்ற சூழலைக் கொண்டு, மிக விரைவாக வளர்ந்து வரும் அப்யாசிகள் குடியிருப்பானது, மற்ற அப்யாசிகள் குடியிருப்புப் பகுதிகளுக்கெல்லாம் ஒரு முன் உதாரணம் ஆகும். முழுமையான நிதி திட்டமிடல் மற்றும் அப்யாசிகளின் குழுப்பணி ஆகியவற்றின் விளைவுதான் ஓசூர் ஆசிரமத்தை அடுத்துள்ள அப்யாசிகளின் மாதிரிக் குடியிருப்பாகும்.

ஓசூர், தமிழ்நாடு அரசால் ஊக்குவிக்கப்பட்ட, தொழில்துறை மையமாகும். அது, பெங்களூருக்கு கிழக்கே 25 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. 1995 ம் ஆண்டிலிருந்து ஆசிரமத்திற்கு நிலம் தேடும் பணி துவங்கப்பட்டது. 2009ல், ஓசூர் பேருந்து நிலையத்திலிருந்து 5 கி.மீ. தொலைவில், கெலவரப்பள்ளி அணையை நோக்கியுள்ள, ஆவலப்பள்ளி கிராமத்தில்தான் இத்தேடுதலுக்கான பலன் கிடைத்தது. அப்போது மண்டலப் பொறுப்பாளராக இருந்த சகோ.சி.ராஜகோபாலன், அந்த இடத்தினைப் பார்வையிட்டு, மேற்கொண்டு ஆவன செய்ய வேண்டியவைகளுக்கு சம்மதம் தெரிவித்தார்.

### அவரது தொலைநோக்குப் பார்வை

பல வருடங்களுக்கு முன்பு, ஒரு அப்யாசி, ஓசூர் ஆசிரமத்திற்கு நிலம் அன்பளிப்பாக வழங்க முன்வந்தபோது, "ஓசூர் ஆசிரமத்திற்கு ஏக்கர்களில் நிலம் தேவை" என்று மாஸ்டர் மென்மையாகக் கூறினார். 4.75 ஏக்கர் நிலம் ஆசிரமத்திற்காகவும், மீதமுள்ள இடம் அப்யாசிகளின் குடியிருப்புப் பகுதி உருவாக்கத்திற்காகவும் ஆக மொத்தம் 13.8 ஏக்கர் நிலத்தை மாஸ்டர் ஆசிர்வதித்த பொழுதுதான், அவரது தொலைநோக்குப் பார்வையை உணர முடிந்தது. ஆசிரம நிலமானது, 2010 ஜனவரி 22 அன்று, நமது மிஷனின் இணைச் செயலாளர் சகோ.ஏ.பி.துரை அவர்களால் பதிவு செய்யப்பட்டது. அப்யாசிகளின் குழுப்பணியினால் மிகுந்த

மகிழ்ச்சியடைந்த மாஸ்டர், குடியிருப்பிற்கு, "பிரகதி என்கிளேவ்" என்று பெயர் சூட்டினார்.

## முக்கிய அணி

நிதி, உட்கட்டமைப்பு, சட்டம் சார்ந்த பிரச்சனைகள் ஆகியவை பற்றிய முடிவுகளை எடுக்க, 7 பேர் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டது. இந்தக்குழு அப்யாசிகளுடன் ஒருங்கிணைந்து விரிவான கலந்தாலோசனைக்குப்பிறகு முடிவுகளை எடுத்தது. அவர்கள் நிலத்தின் விலை, வீடுகளின் கட்டமைப்பு, ஆசிரம நிலம் வாங்க நன்கொடை, ஆசிரமக் கட்டமைப்பு மற்றும் நீண்ட காலப் பராமரிப்பு போன்றவற்றுக்கான திட்டங்களை வரையறுத்தனர்.

## உட்கட்டமைப்பு

இந்த வளாகத்தில், ஒவ்வொன்றும் சுமார் 2400 ச. அடி உள்ள, 102 மனைகள் உள்ளன. தற்போதுள்ள கட்டமைப்பு, சுற்றுச்சவர், மழைநீர் வடிகாலமைப்பு, இரண்டு ஆழ்துளைக் கிணறுகளிலிருந்து வரும் தண்ணீருக்கான, ஒரு லட்சம் கனலிட்டர்கள் கொள்ளளவு உள்ள நீர்த்தொட்டி, அனைத்து மனைகளுக்கும் தண்ணீர்க்குழாய் இணைப்பு, கான்கிரீட் சாலைகள், ஒரு சமுதாயக் கூடம், (தற்சமயம் அது தியானக் கூடமாகப் பயன்படுத்தப்படுகிறது) குழந்தைகளுக்கான விளையாட்டுமைதானம் மற்றும் பொது பூங்காக்கள் ஆகியவற்றைக் கொண்டுள்ளது. சாலையோரம் நடப்பட்டுள்ள சுமார் 700 மரங்கள் ஆசிரமத்திற்கு மேலும் அழகூட்டுகின்றன. ஒவ்வொரு மனைக்கும், மின்சார இணைப்புக்கான வசதியும் வழங்கப்பட்டுள்ளது. ஒரு ஜெர்மன் ஷெப்பர்டு நாய், இடையறாது காவல் காத்து வருகிறது. வளாகம் முழுவதும் சூரிய ஆற்றலைப் பயன்படுத்தும் விளக்குகள் மற்றும் மழைநீர் சேமிப்புத் திட்டத்தைப் பூர்த்தி செய்தல் ஆகியவை இந்தச்செயல் திட்டத்தின் எதிர்காலத்திட்டங்கள் ஆகும்.

## சமுதாய வாழ்க்கை முறை

வளாகத்தில், மூன்று வருட குறுகியகாலத்திற்குள், பத்து வீடுகள் பூர்த்தியடைத்துள்ளன. இரண்டு வீடுகள் கட்டப்பட்டுவருகின்றன. விரைவில் மேலும் சில வீடுகளும் கட்டப்படும். ஆசிரமச் சூழலில் வாழ்வதில் அப்யாசிகள் மகிழ்ச்சி அடைகின்றனர். சகோதரத்துவம் மற்றும் சகிப்புத்தன்மை ஆகியவற்றை வளர்த்துக் கொண்டு, ஒரு பெரிய குடும்பமாக வாழ, மாஸ்டர் அளித்துள்ள மிகச் சிறந்த வாய்ப்பாக ஒவ்வொருவரும் உணர்கின்றனர். அமைதியான சூழல், அவர்கள் தங்களை சுயபரிசோதனை செய்து கொண்டு, இலட்சிய அப்யாசிகளாகத் தங்களைச் செம்மைப்படுத்திக் கொள்ள உதவுகிறது. ஒரு முறை அவர்கள் வளாகத்தினுள் வந்து விட்டால், அங்கிருந்து வெளியே செல்லவேண்டுமென்று தங்களுக்குத்தோன்றுவதேயில்லை என்பதே அனைவரின்



பொதுவான எண்ணமாக உள்ளது. விளையாடுவதற்கும், இயற்கையை ஆராய்வதற்கும் ஏற்றதாக உள்ள சூழலால், இந்த சமுதாயத்தில் உள்ள குழந்தைகளே மிகவும் அதிகமாக மகிழ்வடைந்து ஒருவருக்கொருவர் இணைந்து ஒரு சமச்சிரான சூழ்நிலையில் வாழ்கின்றனர்.

ஆசிரம நிலத்தில் பருவகாலக் காய்கறிகளும், தானியங்களும் அப்யாசிகளின் உதவியுடன் வளர்க்கப்பட்டு, கண்காணிக்கப்படுகின்றன. அவரவர் சமையலறைத் தோட்டங்களிலிருந்து வரும் காய்கனிகளும், பகிர்ந்து கொள்ளப் படுகின்றன. அப்யாசிகள் அனைவரும் பொதுவான குறிக்கோளை அடையவும், சகோதரத்துவ நிலை, சகிப்புத்தன்மை, பரஸ்பர நம்பிக்கை ஆகியவற்றில் மிக உயர்ந்த நிலையைப் பெறவும், வாழ்கிறார்கள் என்பது தான் இத்தகைய சமுதாயத்தில் வசிப்பதன் முதன்மையான நம்மையாகும். அமைதியான, தூய்மையான, இயற்கையுடன ஒன்றியுள்ள சுற்றுச் சூழல், இந்த இடத்திற்கு வருபவருக்கு மிகவும் வரவேற்பளிப்பதாக உள்ளது.

## ஆசிரம செயல்திட்டம்

ஆசிரமக் கட்டிடப்பணிக்கு, மாஸ்டர் தமது ஒப்புதலை அளித்துள்ளார். இறுதிவரைபடமும், அதற்கான ஒப்புதலும், தலைமையகத்தில் செயல்பாட்டில் உள்ளன. அதில் ஒரு தியானக்கூடம், தங்குமிடம், மற்றும் உணவருந்தும் அறை ஆகியவை அடங்கும். தற்சமயம், தற்காலிகமான தியானக் கூடத்தில், சத்சங்கங்கள் நடைபெற்று வருகின்றன. இந்த இடம் வேறொரு உபயோகத்திற்காக மாற்றப்படும். இதேபோல், தற்காலிக சமையலறை மற்றும் விருந்தினர் அறையும் அமைக்கப்பட்டுள்ளது. வேறு மையங்கள் மற்றும் ஆசிரமங்களில் குடியிருப்பு வளாகங்களைத் திட்டமிடுபவர்கள், இந்த வளாகம் மற்றும் ஆசிரமத்தைப் பார்வையிடுவதன் மூலம் நன்மை அடைவர்.







To download or subscribe to this newsletter, please visit http://www.sahajmarg.org/newsletter/india For feedback, suggestions and news articles please send email to in.newsletter@srcm.org

© 2013 Shri Ram Chandra Mission ("SRCM"). All rights reserved. "Shri Ram Chandra Mission", "Sahaj Marg", "SRCM", "Constant Remembrance" and the Mission's Emblem are registered Trademarks of Shri Ram Chandra Mission.This Newsletter is intended exclusively for the members of SRCM. The views expressed in the various articles are provided by various volunteers and are not necessarily those of SRCM.